**கவனிக்க.**-2022.06.17 ஆந் திகதிய 2285ஆம் இலக்க, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II ( தமிழ் மொழிமூலம் ) பிரசுரிக்கப்படவில்லை.



# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2286 - 2022 ජූනි මස 24 වැනි සිකුරාදා - 2022.06.24

*2286 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு யூன் மாதம் 24 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)



| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 993 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | - | ஏல விற்பனைகள் | - |
| ஆய விற்பனையும் குத்தகையும் | 990 | நானாவித அறிவித்தல்கள் | 995 |



### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகுந் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது *2022, யூலை மாதம் 15 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2022, யூலை மாதம் 01 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.".

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2022 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

989 - B 082357 - 5,403 (2022/06)

# ஆய விற்பனையும் குத்தகையும்

## அம்பாந்தோட்டை மாவட்ட எல்லைக்குள் இருக்கும் கள்ளுத் தவறணை குத்தகை - 2023

அம்பாந்தோட்டை மாவட்ட எல்லைக்குள் இருக்கும் முதலாம் இலக்க கள்ளுத் தவறணையில் 2023 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01ஆந் திகதி தொடக்கம் 2023 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி வரை சில்லறையாக கள்ளு விற்கும் உரிமை வழங்குவதற்கு நடைமுறையில் இருந்து வரும் விதிகளுக்கு அமையவும் 1982, ஓகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகைக்கு அமையவும் கேள்விகள் கோரப்படுகின்றன.

2. கேள்விப்பத்திர வைப்புப் பணமாக 5,000 ரூபாவை எந்தவொரு பிரதேச செயலாளர் அலுவலகத்திலும் செலுத்திப் பெறப்பட்ட பற்றுச் சீட்டுடன் முறையாகத் தயாரிக்கப்பட்ட கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பிக்க வேண்டும்.

3. ஒவ்வொரு கேள்விப்பத்திரமும் தமது சொந்தப் பெயரில் இருக்க வேண்டும். முகவர்கள் அல்லது இலங்கைப் பிரசைகள் அல்லாதவர்களின் மூலமாகவோ அல்லது 1982.08.20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் குறிப்பிட்டுள்ள 1982 ஆம் ஆண்டின் கள்ளுத் தவறணை குத்தகை சட்டங்களுக்கு அமைய அருகதையற்றவர்களின் கேள்விப்பத்திரம் அனுமதிக்கப்பட மாட்டாது.

4. ஒருவர் ஒரு கேள்விப்பத்திரத்திற்கு அதிகமாகவோ அல்லது 5 பேர்களை விட அதிகமானோர் சேர்ந்தோ அத்தவறணைக்கான கேள்விப்பத்திரம் சமர்ப்பிக்கப்படலாகாது.

5. ஒவ்வொரு கேள்விப்பத்திரமும் "அம்பாந்தோட்டை 1 ஆம் இலக்க கள்ளுத் தவறணைக்கான கேள்விப்பத்திரம் - 2023" என தபால் உறையின் மேல் மூலையில் எழுதப்பட்டு பிரதேச செயலாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பத்திர பெட்டியில் சேர்க்கப்பட்டோ அல்லது தபாலிலோ 2022.08.12 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு முன்பாக அம்பாந்தோட்டை பிரதேச செயலாளருக்கு கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படல் வேண்டும். கேள்விப்பத்திரம் கோருபவர்கள் அவைகள் மூடப்படும் நேரத்தில் அம்பாந்தோட்டை பிரதேச செயலாளர் அலுவலகத்திற்கு சமுகமளிக்க வேண்டும்.

6. தெரிவுசெய்யப்பட்ட கேள்வியாளர் யார் என்பதை அறிந்ததும் அவர் ஒப்பந்த விற்பனை விதிகள் அடங்கிய கேள்விப்பத்திரத்தில் கைச்சாத்திட்டு அம்பாந்தோட்டை பிரதேச செயலாளரினால் குறிக்கப்படும் பணத்தைப் பிணைப்பணமாக கட்ட வேண்டும்.

7. ஒரு கேள்விப்பத்திரத்தையோ அல்லது எல்லா கேள்விப்பத்திரங்களையுமோ ஏற்கவோ அல்லது மறுக்கவோ அம்பாந்தோட்டை பிரதேச செயலாளருக்கு உரிமை உண்டு.

8. இவ்வறிவித்தலில் குறிப்பிட்டுள்ள கேள்விப்பத்திரம் முடிவடையும் திகதி 2022.08.12 ஆனது மாற்றப்பட்டால், மறுபடியும் கேள்விப்பத்திரம் முடிவடையும் திகதி 2022.09.12 எனக் கருதப்படல் வேண்டும்.

9. மேலதிக விபரங்களுக்கு அம்பாந்தோட்டை பிரதேச செயலாளர் அவர்களை தொடர்பு கொண்டு தெரிந்து கொள்ளலாம்.

கௌசல்யா கலப்பத்தி,
பிரதேச செயலாளர்,
அம்பாந்தோட்டை.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
அம்பாந்தோட்டை,
2022? யூன் 16.

**அட்டவணை**

அம்பாந்தோட்டை மாவட்டத்தில் அனுமதிக்கப்பட்ட கள்ளுத் தவறணை

| கள்ளுத் தவறணை | பிரிவு | எல்லை | கேள்விப் பத்திரம் முடியும் திகதி | தவறணை திறக்கும் நேரம் | தவறணை மூடும் நேரம் |
|---|---|---|---|---|---|
| 01 | அம்பாந்தோட்டை | அம்பாந்தோட்டை | 2022.08.12 | மு.ப. 11.00 | பி. ப. 2.00 |
| | | | மு. ப. 10.30 | பி.ப. 5.00 | பி.ப. 8.00 |

6- 350

## நாரம்மல பிரதேச செயலாளர் பிரிவில் கள்ளுத் தவறணை குத்தகை விற்பனை - 2023

*2023, சனவரி 01 ஆந் திகதி தொடக்கம் 2023, திசெம்பர் 31ஆந் திகதி வரையிலான காலத்தில் கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கள்ளுத் தவறணையை சில்லறைக்கு கள்ளு விற்கும் பூரண அதிகாரத்தை வழங்குவதற்கு 1982 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 207 ஆம் இலக்க வர்த்தமானியில் உரிய ஆணையாளரினால் விளம்பரப்படுத்தப்பட்ட சில்லறைக்கு கள்ளு விற்கும் சட்டங்களுக்கமைய 2022, செத்தெம்பர் 07 ஆந் திகதி மு. ப. 10.30 மணி வரை நாரம்மல பிரதேச செயலாளரினால் கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.*

*2. கள்ளு குத்தகை வாங்க முன் வருபவர் எந்தவொரு பிரதேச செயலகத்திலும் பெற்றுக்கொள்ளக்கூடிய உரிய கேள்விப்பத்திரத்தை முறையே பூர்த்தி செய்து அட்டவணையில் குறிப்பிடப்பட்டிருக்கும் வைப்புப் பணத்தை இவ்வலுவலகத்திலோ பிரதேச செயலகத்திலோ செலுத்தி பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டை மேல் குறிப்பிட்ட வர்த்தமானி அறிவித்தலின்படி கள்ளு விற்கும் சட்டங்களுக்கமைய பெற்றுக்கொண்ட பெறுமதிச் சான்றிதழை காகித உறையிலிட்டு முத்திரை ஒட்டி கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் தான் விலைகோரும் தவறணையின் பெயரையும் இலக்கத்தையும் தெளிவாகக் குறிப்பிட்டு அட்டவணையில் குறிப்பிட்டுள்ள இறுதி நேரத்திற்கு முன் கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்பவோ அல்லது இப்பிரதேச செயலகத்தில் இதற்காக வைக்கப்பட்டிருக்கும் கேள்விப்பத்திரப் பெட்டியில் இடுவதன் மூலமாகவோ பிரதேச செயலாளருக்கு கிடைக்க வழி வகுக்கலாம்.*

*3. கேள்விப்பத்திரம் நிரப்பும்போது உண்டாகும் சகல திருத்தங்களும் கேள்வியாளரினால் கையொப்பமிட்டு அத்தாட்சிப்படுத்தப்பட வேண்டும் . அப்படியில்லாத கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.*

*4. கேள்விப்பத்திரம் ஏற்கப்படும் கடைசித் திகதியான 2022, செத்தெம்பர் 07 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு சகல கேள்வியாளர்களும் பிரதேச செயலகத்திற்கு சமுகமளிக்க வேண்டும்.*

*5. எதுவித ஆட்சேபனையுமின்றி ஒரு கேள்விப்பத்திரத்தையோ எல்லா கேள்விப்பத்திரங்களையுமோ நிராகரிக்கும் உரிமை நாரம்மல பிரதேச செயலாளருக்கு உரியதாகும்.*

*6. கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்பட்டவர் என விளம்பரப்படுத்திய பிறகு அதற்குரித்தானவர் அன்றைய தினம் பி.ப. 3.00 மணிக்கு முன் நாரம்மல பிரதேச செயலாளர் கூறும் தொகையை வைப்புப் பணமாகச் செலுத்தி வியாபார நியதிகளுக்கு கைச்சாத்திட வேண்டும்.*

*7. 2023 ஆம் ஆண்டுக்காக தற்போது கள்ளுத் தவறணை உள்ள இடங்கள் தரப்படும் என உறுதி அளிக்கப்படமாட்டாது. தற்போதைய நிலையங்கள் 2023 ஆம் ஆண்டிற்காக பெற்றுக்கொள்ளப்படாவிடின் அதற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட நிலையம் தகுந்தது என கேள்விப்பத்திரம் பெற்றுக்கொள்ளப்பட்ட திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் நாரம்மல பிரதேச செயலாளரின் அனுமதியை பெற்றுக் கொள்ளல் வேண்டும்.*

*8. 2022.09.07 ஆந் திகதி ஆய விற்பனைக்கு தகுந்த கேள்வி இல்லாதவிடத்து 2022.10.07 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு மறு ஆய விற்பனை இதே இடத்தில் நடைபெறும்.*

*9. மேலதிக விபரங்களை இப்பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.*

*டபிள்யூ. பீ. சீ. என். பதிரன,*
*பிரதேச செயலாளர்,*
*நாரம்மல.*

*பிரதேச செயலகம்,*
*நாரம்மல,*
*2022, யூன் 08.*

### அட்டவணை

| தொடர் இல. | பகுதி | கேள்விப்பத்திரம் ஏற்கப்படும் கடைசித் திகதியும் நேரமும் | கேள்விப்பத்திர வைப்புப் பணம் ரூபா | தவறணை திறந்திருக்கும் நேரம் |
|---|---|---|---|---|
| 1 | நாரம்மல | 2022.09.07<br>மு. ப. 10.30 மணி | 1,000 .00 | மு.ப.11.00 மணி தொடக்கம் பி. ப. 2.00 மணி வரை<br>பி. ப. 5.00 மணி தொடக்கம் பி.ப. 8.00 மணி வரை |

6- 314

## மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆரையம்பதி பிரதேச செயலாளர் பிரிவு

*கள்ளுத் தவறணை குத்தகை விற்பனை - 2022, யூலை - 2022, யூன்*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1982, ஓகத்து 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 1982 ஆம் ஆண்டின் கள்ளுத்தவறணை குத்தகை விற்பனை விதிகளின்படி மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆரையம்பதி பிரதேசத்திற்குட்பட்ட கள்ளுத்தவறணைக்கான 2022 ஆம் ஆண்டு யூலை மாதம் 01 ஆந் திகதி முதல் 2023, யூன் மாதம் 30 ஆந் திகதி வரை கள்ளு விற்கும் பிரத்தியேக உரிமத்துக்கு கேள்வி விண்ணப்பங்கள் கீழ்க் குறிப்பிட்ட திகதி, நேரம் வரை மண்முனைப்பற்று ஆரையம்பதி பிரதேச செயலகத்தில் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்வி திறக்கப்படும் போது கேள்விதாரர்கள் ஆரையம்பதி பிரதேச செயலகத்தில் நடாத்தப்படும் கேள்விச் சபைக் கூட்டத்திற்கு சமுகமளித்திருத்தல் வேண்டும்.*

*1. கேள்வி விண்ணப்பங்களின் பேரில் ஆயிரத்து ஐந்நூறு ரூபா (ரூபா 1,500.00) பணத்தை ஆரையம்பதி பிரதேச செயலாளரின் பெயரில் செலுத்திப் பெறப்படும் பற்றுச்சீட்டினை சமர்ப்பிக்கும் பட்சத்தில் விண்ணப்பப்படிவத்தை பெறமுடியும். இக்கேள்விப்பத்திரம் சமர்ப்பிக்கப்படும்போது இப்பற்றுச்சீட்டும் இணைக்கப்பட்டிருத்தல் அவசியமாகும். கேள்விப்பத்திர விநியோகம் 2022.06.24 ஆந் திகதி தொடக்கம் 2022.07.08 ஆந் திகதி பிற்பகல் 3.00 மணியுடன் முடிவடையும்.*

*2. அந்தந்த பிரதேச செயலாளரினால் வழங்கப்படும் பெறுமதிச் சான்றிதழானது கேள்விதாரர் விண்ணப்பிக்கும் தொகையில் 15% வீதத்திற்கு குறைவாக இருத்தலாகாது. இப்பெறுமதிச் சான்றிதழின் மூலப் பிரதி கேள்விப்பத்திரத்துடன் இணைக்கப்பட்டிருக்க வேண்டும்.*

*3. கேள்விப் பத்திரங்கள் பிழையாக நிரப்பப்பட்டிருந்தால் அவை நிராகரிக்கப்படும்.*

*4. கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பிக்காது கேள்விப்பத்திரங்களுக்குச் செலுத்திய பணத்தை மீளப் பெற்றுக் கொள்ள விரும்பினால் தங்களின் கோரிக்கையை கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும் நாளில் இருந்து இரண்டு வாரங்களுக்குள் தாங்கள் பெற்றுக்கொண்ட கேள்விப்பத்திரங்களைப் பூரணப்படுத்தாது பணம் செலுத்தியதற்குரிய பற்றுச்சீட்டுடன் திருப்பி சமர்ப்பித்தால் அக்கோரிக்கைகள் கவனத்தில் கொள்ளப்படும்.*

*5. தவறணை தற்போது இருக்கும் இடத்தில் தொடர்ந்தும் இருக்கும் என்பதற்கு உத்தரவாதம் இல்லை.*

*6. பதிவு செய்யப்பட்ட தெங்கு, பனம்பொருள் கூட்டுறவுச் சங்கங்கள் இந்த குத்தகை விற்பனையில் கலந்து கொள்வதாயின் சங்கம் அமைந்திருக்கும் பிரதேசத்திற்குரிய கள்ளுத் தவறணைக்கு மட்டுமே விண்ணப்பிக்க முடியும். அத்துடன் சங்கம் தற்போது இயங்குகின்றமை பற்றியும் சங்கத்தால் கள்ளுத்தவறணையை குத்தகைக்கு எடுத்து நடாத்தக்கூடிய ஆற்றல் உள்ளமை பற்றியும் மட்டக்களப்பு மாவட்ட உதவிக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரினால் உறுதிப்படுத்தப்பட்ட கடிதம் சமர்ப்பிக்கும் பட்சத்திலேயே குத்தகை விற்பனைக்கான விண்ணப்பப்படிவம் வழங்கப்படும். (நிதி அமைச்சின் 01/2012 ஆம் இலக்கம் கொண்ட 2012.01.05 ஆந் திகதிய சுற்றுநிருபத்திற்கமைவாக காணப்படுதல் வேண்டும்.)*

*7. ஏனைய விபரங்கள் ஆரையம்பதி பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.*

(திருமதி) ந. சத்தியானந்தி,
பிரதேச செயலாளர்,
மண்முனைப்பற்று.

பிரதேச செயலகம்,
மண்முனைப்பற்று,
2022, யூன் 20.

**அட்டவணை**

| கள்ளுத் தவறணைக்குரிய பிரதேச செயலகப் பிரிவு | தவறணை அமைய வேண்டிய இடம் | கேள்விப்பத்திரங்கள் ஏற்கப்படும் இறுதித் திகதியும் நேரமும் — திகதி | நேரம் |
|---|---|---|---|
| மண்முனைப்பற்று | ஆரையம்பதி தெற்கு கிராம அலுவலர் பிரிவு | 2022.07.11 | மு.ப. 9.30 மணி |

**குறிப்பு.-** 1. கேள்விச் சபை 2022.07.11 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்குக் கூடும்.

2. விற்பனைத் தினத்தில் தகுதியான குத்தகைக்காரர் தேர்ந்தெடுக்கப்படாது விட்டால் மறு விற்பனை 2022.07.14 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு நடைபெறும்.

6-372

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனியின் பெயர் 2022.06.02 ஆந் திகதியிலிருந்து மாற்றம் செய்யப்படுகின்றதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

*கம்பனியின் முன்னைய பெயர்:* சர்வசார அக்ரோ ரிசெர்ச் எண்ட் டெக்னொலொஜி சென்டர் லிமிட்டட்

*பதிவு இலக்கம் :* PB 00228496

*புதிய முகவரி :* இல. 31, முதுஹேனவத்த வீதி, திக்ஹெடெப்மா, மீகொடை

*கம்பனியின் புதிய பெயர்:* சர்வோதய சர்வசார அக்ரோ ரிசெர்ச் எண்ட் டெக்னொலொஜி சென்டர் லிமிட்டட்

சென்ட்ரல் கோப்பரேட் அன்ட்
கன்சல்டன்சி சேர்விஸஸ்
(பிறைவட்) லிமிடட்.
கம்பனிச் செயலாளர்கள்.

இல. 116/10,
ரொஸ்மிட் பிளேஸ்,
கொழும்பு 07.

06-369

## விசேட அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

கொழும்பு 01, யோர்க் வீதி, இல. 124, கெபே போர்ட் ரெஸ்டுரன்ட் ஐச் சேர்ந்த மொஹமட் குத்தூஸ் மொஹமட் நஸார் (தே. அ. அட்டை இல. 671781376V இன் உரிமையாளர்) இன் பெயரில் 2018, யூன் 04 ஆந் திகதியிடப்பட்ட பக்கம் 84 வரிகள் 9249 உள்ளடக்கம் 237 இல் பத்தரமுல்ல அலுவலகத்தின் மூலம் எழுத்து மூல அங்கீகாரம் நடைமுறைப்படுத்தப்படும் புத்தகத்தில் பதிவு செய்த கொழும்பு பகிரங்க நொத்தாரிசு M.R.M. பஸீன் இனால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2017, யூன் 19 ஆந் திகதியிடப்பட்ட கொழும்பு 06, பெரகும்பா பிளேஸ், இல. 21 இன் தமது அலுவலகத்தைக் கொண்டுள்ள மதிப்பீட்டு இல. PV 94728 ஐக் கொண்டுள்ள "தி எனர்ஜி மெனேஜ்மன்ட் இன்டர்நெஷனல் (பிரைவட்) லிமிட்டட்" இற்கு என்னால் வழங்கப்பட்ட விசேட அற்றோணி தத்துவ இல.309 ஐ உடன் அமுலுக்கு வருமாறு இரத்துச் செய்து இல்லாதொழிப்பதாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் பொது மக்களுக்கும் கொழும்பு 06, பெரகும்புர பிளேஸ், இல. 12 இல் தமது அலுவலகத்தைக் கொண்டுள்ள பதிவு இல. 94728 இற்கு உரித்தான எனர்ஜி மெனேஜ்மன்ட் இன்டர்நெஷனல் (பிரைவட்) லிமிட்டட் இன் பணிப்பாளர் ஆகிய நான், இத்தால் அறிவித்தல் விடுக்கின்றேன். அத்துடன் சொல்லப்பட்ட அற்றோணி தத்துவத்தின் கீழான எந்த நடவடிக்கைக்கும் அல்லது உறுதிகள் பற்றியும் இதன் பின்னர் பொறுப்புக்கூறப்பட மாட்டாது.

6-368

## அறிவித்தல்

2022, பெப்புருவரி 21 ஆந் திகதியிலிருந்து செயல்வலுப்பெறும் வகையில் PV 2045 என்ற கம்பனி பதிவிலக்கத்தைக் கொண்ட ஆனந்தய வாத்துவ (பிறைவட்) லிமிட்டட் ஆனது PB 1192 என்ற கம்பனி பதிவிலக்கத்தைக் கொண்ட லாவ்ஸ் லெஷர் லிமிட்டட் உடன் ஒருங்கிணைக்கப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதென 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்ட 242(3) ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் இத்தால் நாம் அறிவித்தலை வழங்குகின்றோம்.

ஒருங்கிணைக்கப்பட்ட கம்பனியானது லாவ்ஸ் லெஷர் லிமிட்டட் ஆகும்.

எச். ஆர்.எஸ். எஸ். ஹதேகொட,
கம்பனிச் செயலாளர்.

6-312

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் அதன் பொது மக்களுக்கும் இத்தால் அறியத்தருவது, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் கொழும்பு 07 றொஸ்மிட் அவனியு, இல. 03 எனும் முகவரியைச் சேர்ந்த சீ. பீ. சுவர்ணகாந்தன் அல்லது சொர்ணகாந்தன் (கனடிய கடவுச்சீட்டு இல. GF 488764) ஆகிய நான், கொழும்பு 06, சோனகத் தெரு, இல. 52 – 5/1, கிறவுன் கோர்ட் தொடர்மாடி எனும் முகவரியைச் சேர்ந்த ஜயகுமார் தங்கவேலு (தே. அ. அ. இல. 473482797V) என்பவரின் பெயரில் 2015.09.16 ஆந் திகதியிடப்பட்டு நாட்குறிப்பு இல. 2912 போலியோ 32, வொலியும் 08 இன் கீழ் பதிவு செய்யப்பட்ட அற்றோணி தத்துவத்தில் உள்ள எங்களால் வழங்கப்பட்ட எல்லா அதிகாரங்களும் இரத்துச் செய்யப்பட்டதாகவும் எமக்கு அல்லது எமது சார்பாக சொல்லப்பட்ட ஜயகுமார் தங்கவேலு என்பவரினால் மேற்கொள்ளப்படும் எந்தவொரு நடவடிக்கைக்கும் நான் பொறுப்பாகமாட்டோம் என்பதாகும்.

சீ.பீ.சுவர்ணகாந்தன் அல்லது
சொர்ணகாந்தன்,
கம்பனிச் செயலாளர்கள்.

2022.06.16.

6-301

## டி எப் அசோசியேட்ஸ் (பிரைவேட்) லிமிட்டட் கம்பனியின் பதிவு இல. – PV 15328

*2007 ஆம் ஆண்டு 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 324(3) ஆம் மற்றும் 334(2) ஆம் மற்றும் 334(2) ஆம் சரத்துக்கு அமைவாக கடன் கொடுத்தோர் கூட்ட அறிவித்தல்*

2007 ஆம் ஆண்டு 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 324(3) ஆம் மற்றும் 334(2) ஆம் சரத்துகளுக்கு அமைவாக மேற் குறிப்பிடப்பட்ட கம்பனிக்கு கடன் கொடுத்தோருக்கான கூட்டம் ஒன்று எதிர்வரும் 2022, ஆடி மாதம் 15 ஆந் திகதி பி. ப. 3.00 மணிக்கு இல. #5/4, ஜனதா கோர்ட், இல. 27, அல்பிட் பிளேஸ், கொழும்பு 03 இல் நடைபெறுமென இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகிறது. (கூட்டத்தில் பங்குபற்றுவதற்கான அதிகாரப் பத்திரத்தினை இக் கம்பனிக்கு கடன் கொடுத்தோர் கூட்டம் கூடுவதற்கு முன்பதாக இல. #5/ 4, ஜனதா கோர்ட், இல.27, அல்பிட் பிளேஸ், கொழும்பு 03 இல் அமைந்துள்ள மேற்படி கம்பனியின் அலுவலகத்தில் கூட்டத்திற்கு முதல் நாள் மாலை 3.00 மணிக்கு முன்பதாக தாக்கல் செய்ய வேண்டும்.)

கடன் கொடுத்தவர்கள் கூட்டத்தில் வாக்களிக்க விரும்பின் தமது கடன் விபரங்களை முன்கூட்டியே மேற்படி அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும். மேலும் முன்னிலைப்படுத்தப்பட்ட கடன்கொடுத்தோர் (தமது பொறுப்பு பத்திரத்தைச் சமர்ப்பிக்காவிடத்து) தமது கடன் விபரங்களை அ-து கொடுத்த தொகை, திகதி மற்றும் தற்போதைய நிலுவை என்பவற்றையும் மேற்கண்டவாறு சமர்ப்பிக்க வேண்டும்.

பணிப்பாளர் சபை,

டி. எப். அசோசியேட்ஸ் (பிரைவேட்)
லிமிட்டட்.

2022, ஆனி 16.

***குறிப்பு*** *: தேவை ஏற்படின் இக்கூட்டத்தில் கடன் கொடுத்தோரால் மேற்படி கம்பனியின ஒடுக்குதலுக்கான கலைப்பாளர் ஒருவரை நியமிக்கவும் பரிசோதகர் குழு வொன்றை நியமிக்கவும் முடியும்.*

6-355

---

## விசேட அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலங்கை, வடமேல் மாகாணம், குருநாகல், நிக்கதளுபொத, கனேவத்த, பன்வை, இல. 68/ 2 ஐச் சேர்ந்த கங்கானமலாகே இந்திரானி ஜயசிங்ஹ மெனிக்கே (தே. அ. அ. இல. 197161003242) ஆகிய நான், பொலன்னறுவை, திம்புலாகலை, நவமில்லன இல.24 ஐச் சேர்ந்த கங்கானமலாகே மல்லிகா ஜயசிங்ஹ மெனிக்கேவிற்கு (தே. அ. அ. இல. 735132431V) என்னால் வழங்கப்பட்ட குருநாகல் பகிரங்க நொத்தாரிசு சரோஜினி தென்னகோனினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2021, யூலை 16 ஆந் திகதியிடப்பட்ட அற்றோணி தத்துவ இல. 157 ஐ இரத்துச் செய்து இல்லாதொழிப்பதாக இத்தால் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் மக்களுக்கும் அறிவித்துக்கொள்கிறேன். அத்துடன் இத்தினம் முதல் என் சார்பாக சொல்லப்பட்ட அற்றோணியை உட்படுத்தி மேற்கொள்ளப்படும் எந்த செயற்பாடுகள் அல்லது கொடுக்கல் வாங்கல்களுக்கும் நான் பொறுப்பாகமாட்டேன்.

K. I.J. மெனிக்கே,

2022, மே 09.

6-317

---

## அற்றோணி தத்துவத்தை இரத்துச் செய்தல்

மினுவங்கொட, குருநாகல் வீதி, மனமின தர்ஷன மாவத்தை, இலக்கம் 100/18 இல் வசிக்கும் தளுகம ஆச்சாரிகே டயனஸ் (தே. அ. அ. இல. 194409903303) ஆகிய நான், அதே முகவரியில் வசிக்கும் சமயமன்திரி ரஞ்ஜனி (தே. அ. அ. இல. 533340790V) என்பவருக்கு, பிரசித்த நொத்தாரிசு யூ. பீ. பிரேமதிலக என்பவரினால் 2013.04.30 அன்று அத்தாட்சிப்படுத்திய இலக்கம் 24032 என்ற அற்றோணிப் பத்திரத்தின் மூலம் என் சார்பில் மேற்கொள்வதற்காக வழங்கப்பட்ட அதிகாரமானது இன்று முதல் செயல் வலுப்பெறும் வண்ணம் இரத்துச் செய்யப்படுவதுடன் மேற்படி சமயமன்திரி ரஞ்ஜனி என்பவர் இன்று முதல் எனது சட்டபூர்வ அற்றோணிதாரர் அல்ல எனவும் மேற்படி 24032 ஆம் இலக்க அற்றோணிப் பத்திரமானது இதன் பின்னர் செல்லுபடியற்றதெனவும் இலங்கைப் பொது மக்கள் அனைவருக்கும் இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன்.

தளுகம ஆச்சாரிகே டயனஸ்.

6-345

---

## அற்றோணிப் பத்திரத்தை நிராகரித்தல்

மத்திய மாகாணத்தில், கண்டி மாவட்டத்தில் இல. 83, அம்பிடிய வீதி, கண்டி என்ற விலாசத்தை வசிப்பிடமாகக் கொண்ட கால்லகே தொன் காமினி அல்விஸ் (அடையாள அட்டை இல. 550200619X) ஆகிய நான் பிரசித்த நொத்தாரிசு எம்.எம். ஜிப்ரி அவர்களினால் 2013 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம 22 ஆந் திகதி எழுதி உறுதிப்படுத்தப்பட்ட அற்றோணிப் பத்திரத்தின் ஊடாக இலக்கம் 162/10, விஹார மாவத்தை, முல்கம்பொல, கண்டி என்கின்ற விலாசத்தை வசிப்பிடமாகக் கொண்ட காலகே தொன் பியதிஸ்ஸ அல்விஸ் (அடையாள அட்டை இல. 502110489V) ஆகிய நபருக்கு வழங்கப்பட்ட அற்றோணிப் பத்திரத்தை 2022 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 12 ஆந் திகதி முதல் இரத்துச் செய்வதாக இலங்கை மக்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றேன்.

கால்லகே தொன் காமினி அல்பிட்டிய.

6-341

# ஏல விற்பனைகள்

**சம்பத் வங்கி பீஎல்சீ**

(முன்பு சம்பத் வங்கி லிமிடெட் என அழைக்கப்பட்டது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழான விற்பனை அறிவித்தல்*

ஐ. எஸ். அத்தநாயக்க மற்றும் எச். டபிள்யூ. எம். என். கே. விஜேசிங்ஹ
கணக்கு இலக்கம் : 0008 5003 8562

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04 ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2017.11.30 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2018.01.26 ஆந் திகதிய இலங்கை வர்த்தமானியிலும் (Gazette) 2018.01.17 ஆந் திகதிய "திவயின" (Divaina), "ஐலண்ட்" (Island), "தினக்குரல்" (Thinakkural) ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான எழுபத்தி நான்கு இலட்சத்து எழுபத்தி ஒன்பதாயிரத்து எழுநூற்று இருபது ரூபா எழுபது சதம் (ரூபா 74,79,720.70) 2017, நவெம்பர் 07 ஆந் திகதி முதல் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை அறுபத்தொன்பது இலட்சத்து பதினாறாயிரத்து எழுநூற்று அறுபத்தெட்டு ரூபா தொண்ணூறு சதம் (ரூபா 69,16,768.90) மேலதிக வட்டியாக ஆண்டொன்றுக்கு பதின் மூன்று வீதம் (13%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு பிணையாக வைக்கப்பட்டுள்ள இங்கு அட்டவணையில் நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரர்களான பீ. கே. ஈ. சேனாபத்தி என்பவர்கள் மூலமாக 2022.07.26 ஆந் திகதி பி. ப. 1.30 மணி முதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என இத்தால் தீர்மானிக்கின்றது.*

**மேற்குறிப்பீடு செய்யப்பட்ட அட்டவணை**

*மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், சியனே கோரலே அதிகாரி பத்து மஹர பிரதேச சபை எல்லைகளுக்குள் மற்றும் மஹர பிரதேச செயலாளர் பிரிவின் கிழக்கு என்டேரமுல்ல இல.255E எனும் கிராம அலுவலர் பிரிவிற்குள் எண்டேரமுல்லையில் அமைந்த "தெல்கஹாவத்த" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவை யாளர் எம். எஸ். கே. ஹேரத் என்பவரால் தயாரிக்கப்பட்ட 2015, திசெம்பர் 13 ஆந் திகதியிடப்பட்ட இல. 2810 எனும் வரைபடத்தில் அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 1 என குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கிற்கு: ஆர். ஏ. என். எல். பெரேரா என்பவரின் காணி; கிழக்கிற்கு: ஆர். ஏ. என். எல் பெரேரா என்பவரின் காணி மற்றும் லொட் 3; தெற்கிற்கு : லொட் 2 மற்றும் மேற்கிற்கு : கே. எஸ். சில்வா மற்றும் கருணாவத்தி என்பவர்களின் காணி ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் ஐந்து தசம் ஏழு ஆறு பேர்ச். (0ஏ. 0றூ. 5.76பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 2810 எனும் வரைபடத்திற்கு அமைவாக கம்பஹா காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் M 377/89 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.*

*கீழே காட்டப்பட்டதன் மீதும் அதன் ஊடாகவும் பிரவேசிப்பதற்கான மார்க்க உரிமைகளுடனானது :-*

*இல. 2810 ஐ ஏற்ற கூறப்பட்ட வரைபடத்தில் காட்டப்பட்ட லொட் 3 (வீதிக்கான ஒதுக்கம்)*

*பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,*

*கம்பனிச் செயலாளர்.*

*06- 357*

---

**சம்பத் வங்கி பீஎல்சீ**

(முன்பு சம்பத் வங்கி லிமிடெட் என அழைக்கப்பட்டது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழான விற்பனை அறிவித்தல்*

*ரிலயன்ஸ் ஒட்டோ இன்டர்நெஷனல் (பிறைவெட்) லிமிட்டெட்*
*கணக்கு இலக்கம் : 0212 1000 4006*

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04 ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2022.04.28 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2022.06.03 ஆந் திகதிய இலங்கை வர்த்தமானியிலும் (Gazette) 2022.05.23 ஆந் திகதிய "திவயின" (Divaina), "ஐலண்ட்" (Island), "தினக்குரல்" (Thinakkural) ஆகிய பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான அறுபத்தி ஐந்து இலட்சத்து முப்பத்து நான்காயிரத்து எழுநூற்று இருபது ரூபா எண்பத்து மூன்று சதம் (ரூபா 65,34,720.83) 2022, மாச்சு 29 ஆந் திகதி முதல் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை அறுபது இலட்சத்து இருபத்தேழாயிரத்து முந்நூற்று இருபத்தைந்து*

ரூபா இருபத்திரண்டு சதம் (ரூபா 60,27,325.22) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றுக்கு ஒன்பது வீதம் (9%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு கூறப்பட்ட ஈட்டு முறி இலக்கங்கள் 2653 மற்றும் 4006 இன் மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள் நிலமனைகளின் குத்தகை உரிமைகளை கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரர்களான பீ. கே. ஈ. சேனாபத்தி என்பவர்கள் மூலமாக 2022.07.28 ஆந் திகதி மு.ப. 11.00 மணி முதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என இத்தால் தீர்மானிக்கின்றது.

### மேற்குறிப்பீடு செய்யப்பட்ட அட்டவணை

மேல் மாகாணம் கொழும்பு மாவட்டம், ஹேவாகம் கோரலே பல்லே பத்துவின் கடுவலை பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் மா நகர சபை எல்லைகளுக்குள் மற்றும் பட்டபொத்த, இல. 479E எனும் கிராம அலுவலர் பிரிவின் தெற்கு தலங்கமை யில் அமைந்த ரொபட் குணவர்தன மாவத்தை, வரிமதிப்பீட்டு இல. 245/B 30 ஐ ஏற்ற " (பரிமாணம்/ பக்கம் B 474/ 104 இல் தெல்காஹாவத்த என தவறுதலாக எழுதப்பட்ட) தல்காஹாவத்த" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் கே. என். ஏ. அல்விஸ் என்பவரால் தயாரிக்கப்பட்ட 2012, ஓகத்து 11 ஆந் திகதியிடப்பட்ட இல. 4474 எனும் வரைபடத்தில் அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 1C2 என குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன- வடக்கு: M. C. வீதி மற்றும் இல. 3999 எனும் வரைபடத்தில் லொட் 1C1; கிழக்கு: இல. 3999 எனும் வரைபடத்தில் லொட் 1C1 மற்றும் இல. 1727 எனும் வரைபடத்தில் லொட் 9; தெற்கு: இல. 1727 எனும் வரைபடத்தில் லொட் 9 மற்றும் டீ. பெரேரா என்பவர் உரிமம் கோரும் காணி மற்றும் மேற்கு: டீ. பெரேரா என்பவர் உரிமம் கோரும் காணி மற்றும் M. C. வீதி, ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் பதினைந்து தசம் எட்டு சைபர் பேர்ச் (ஏ00. றூ00. பே15.80) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 4474 எனும் வரைபடத்திற்கு அமைவானதாகும்.

கூறப்பட்ட இல. 4474 எனும் வரைபடத்தில் குறிப்பிடப்பட்ட லொட் 1C2 உத்தரவுபெற்ற நில அளவையாளர் எஸ். டீ. லியனசூரிய என்பவரால் தயாரிக்கப்பட்ட 1995, ஒற்றோபர் 30 ஆந் திகதியிடப்பட்ட இல. 6321 எனும் வரைபடத்தில் லொட் 1C2 இன் மீள் அளவீடாகும். இது மற்றுமொரு விதத்தில் கீழே விபரிக்கப்பட்ட காணியின் மீள் அளவீடாகும்.

மேற் கூறப்பட்ட தெற்கு தலங்கமையில் அமைந்த "பரிமாணம்/ பக்கம் B 474/ 104 இல் தெல்காஹாவத்த என தவறுதலாக எழுதப்பட்ட) தல்காஹாவத்த" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் என். டீ. சிரிசேன என்பவரால் தயாரிக்கப்பட்ட 1981, சனவரி 14 ஆந் திகதியிடப்பட்ட இல. 3999 எனும் வரைபடத்தில் அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 1C2 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடகிழக்கு: லொட் 1C3 மற்றும் லொட் 1C2; தென் கிழக்கு: இல. 1727 எனும் வரைபடத்தில் லொட் 9; தென் மேற்கு: டீ. பெரேரா என்பவர் உரிமம் கோரும் காணி மற்றும் வட மேற்கு: தற்போது எல். பொடிசின்ஞோ பெரேரா மற்றும் ஏனையோரின் தோட்டம், ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் பதினேழு தசம் எட்டு சைபர் பேர்ச் (ஏ00. றூ00. பே17.80) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 3999 எனும் வரைபடத்திற்கு அமைவாக ஹோமாகமை காணிப் பதிவகத்தில் பரிமாணம்/ பக்கம் B 1431/ 05 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

06- 358

---

## இலங்கை வங்கி

*1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறான இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டத்தின் (397 ஆம் அத்தியாயம்) 22ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்படும் அறிவித்தல்*

1. கடன்தொடர்பு இலக்கங்கள்: 74475077, 74475170, 74475261

இல. 694/4, ரஜ எல, கந்தளாய் என்ற முகவரியைச் சேர்ந்த திரு. ரந்திலக கெதர வீரசிங்க, திரு. ரந்திலக கெதர கருணாதாச, திருமதி கோதாகொட கமகே பத்மினி, திருமதி ரந்திலக கெதர நிமல்கா மதுவந்தி ஆகியோரின் பங்காண்மையின் கீழுள்ள திருவாளர்கள் சம்பிக அரிசி ஆலையின் ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விற்பனை

இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டம் 19 ஆம் பிரிவின் கீழ் இலங்கை வங்கிப் பணிப்பாளர்கள் சபை எடுத்த தீர்மானத்துக்கமைய 2017.07.07 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2027ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2017.06.27 ஆந் திகதிய "தினமின", "டெய்லி நியூஸ்" மற்றும் "தினகரன்" ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய நிலுவையிலுள்ள முதலையும் விற்பனைத் திகதி வரை செலுத்த வேண்டியுள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச் சட்டத்தின் 26 ஆம் பிரிவின் கீழ் அறவிடத்தக்க செலவுகளையும் பணங்களையும் அறவிடும் பொருட்டு கீழே அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள ஆதனத்தையும் கட்டடங்களையும் இல.06-A, பெயாபீல்ட்

காடின்ஸ், கொழும்பு 08 என்னும் முகவரியைச் சேர்ந்த திருவாளர்கள் ஷொக்மன் மற்றும் சமரவிக்ரம ஏலநிறுவனதாரர் 2022.07.28 ஆந்திகதி காலை 11.00 மணிக்கு கந்தளாய் கிளையில் பகிரங்க ஏலத்தில் விற்பாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**மேற்குறிப்பிட்ட முதலாவது அட்டவணை**

கிழக்கு மாகாணம், திருகோணமலை மாவட்டத்தில் கந்தளாய் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட ராஜ எல, 227/B கிராம அலுவலர் பிரிவு, ராஜ எல கிராமத்தில் (காட்டலய் பட்டுவ) அமைந்துள்ள "ராஜ எல கொலனி" என அழைக்கப்படும் காணியின் துண்டு 780 ஆம் இலக்க காணித்துண்டுகள் கிழக்குப் பக்கத்தில் பிரிக்கப்பட்ட காணித்துண்டும் - வடக்கு : துண்டு 741உம்; கிழக்கு : துண்டு 780 உம்; தெற்கு : துண்டு 781 உம்; மேற்கு : துண்டு 782 உம் எல்லைகளாகக் கொண்டு ஒரு ஏக்கர் இருபத்தி மூன்று தசம் சைபர் ஆறு பேர்ச் (1ஏ. 0றூ. 23.06பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள வீடு, அரிசி ஆலை மற்றும் சகலதும் ஆகும். இது திருகோணமலை காணிப்பதிவகத்தில் காணி அபிவிருத்திக் கட்டளைச்சட்டத்தின் கீழ் LDO/P/3/54 ல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

உத்தரவு பெற்ற நில அளவையாளர் கே. செல்லபிள்ளை தயாரித்த 1997, செத்தெம்பர் 19 ஆந் திகதியிட்ட அண்மைய அளவை வரைபடம் இல. 553 இன் படி மேற்குறிப்பிட்ட காணி பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணம், திருகோணமலை மாவட்டத்தில் கந்தளாய் பிரதேச சபை எல்லைகளுள் கந்தளாய், பிரதேச செயலாளர் பிரிவில் ராஜ எல, 227/B கிராம அலுவலர் பிரிவில் கந்தளாய், ராஜ எல, வாட் இல. 4ல் அமைந்த ராஜ எல, பிரிவு 4/694 ராஜ எல கொலனி என அழைக்கப்படும் காணியின் மேற்குறிப்பிட்ட வரைபட இல. 553 இல் விபரித்த துண்டு 1 என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு - வடக்கு : பாதையும்; கிழக்கு : பாதையும்; தெற்கு : மேற்குறிப்பட்ட வரைபட இல. 553 இல் விபரித்த துண்டு 2 உம்; மேற்கு : F.T.P.2 இல் துண்டு 782 உம் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபட இல. 553 இன் படி ஒரு ஏக்கர் இருபத்தி மூன்று தசம் சைபர் ஆறு பேர்ச் (1ஏ. 0றூ. 23.06பே.) விஸ்தீரண முடைய காணியும் அங்கு அமைந்துள்ள வீடு, அரிசி ஆலை என அனைத்தையும் கொண்டுள்ளது.

**இரண்டாவது அட்டவனை**

மேலே முதலாவது அட்டவணையில் விபரித்த நிலமனை மற்றும் காணிக்கு பொருத்திய பின்வரும் இயந்திர சாதனங்களும் அடங்குகின்றன.

**இயந்திர சாதன விபரம்**

1. Two 18 feet Elevators with 2 H. P. motors
2. Paddy cleaner with 3 H. P motor
3. Two paddy stoners within 2 H. P. motors
4. Two Hullers with 10 H. P. motors
5. Two 12 feet elevators with 2 H. P. motors
6. Automatic elevator and Huller with 10 H.P. motors
7. Separator with 15 HP motor
8. Polisher with motor
9. Two Rice Stoner with 2 HP motors
10. 17 feet Elevator with 2 HP motor
11. Winnower with 2 HP motor
12. Winnower with 2 HP motor
13. Paddy drier with 30 HP motor
14. Paddy cleaner with 3HP motor
15. Huller with 25 HP motor
16. Two 12 feet elevators with 2 HP motors
17. Two Winnower fans with 2 HP motors
18. Polisher with 25 HP motor and Starter
19. Rice Stoner with 3 HP motor and starter
20. 18 feet Elevator with 2 HP motor and starter
21. 12 x 4 x 4 feet Rice Bin
22. Grader with motor and starter
23. 110KVA Generator
24. Boiler
25. Blower
26. Suction Fan

மேலே முதலாவது அட்டவணையில் விபரித்த காணிக்கும் நிலமனைக்கும் தற்சமயம் பொறுத்தப்பட்டுள்ளவையும் மற்றும் இதன் பின்பு பொருத்தப்படவுள்ள அனைத்தும் இதனுள் அடங்கும்.

இலங்கை வங்கி பணிப்பாளர் சபை கட்டளைப்படி.

திரு. ரி. விஜயபாஸ்கர்,
கிளை முகாமையாளர்.

இலங்கை வங்கி,
கந்தளாய்.

6- 344

---

**பேன் ஏசியா வங்கி பேங்கிங் கோப்பரேஷன் பீ.எல்.சீ .**

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் பகிரங்க ஏல விற்பனை

பேன் ஏசியா பேங்கிங் கோப்பரேஷன் பீ.எல்.சீ . யினால் எனக்கு வழங்கப்பட்டுள்ள கீழ்க்காணும் அதிகாரத்தின் பிரகாரம், கீழ்க் குறிப்பிடப்பட்ட ஆதனம் பின்வரும் திகதியில் பின்வரும் நேரத்தில் அவ்வாதனம் அமைந்துள்ள அதே இடத்தில் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்

கிழக்கு மாகாணம், அம்பாறை மாவட்டம், பனாமைபத்துவ பிரதேச சபை எல்லைக்குட்பட்ட, உல்லையில் அமைந்துள்ள

கட்டிடங்கள், மரங்கள், பயரிச்செய்கைகள் மற்றும் சகலவற்றையும் உள்ளடக்கியுள்ள காணி (உரிமம் பெற்ற நில அளவையாளர் H. J. J. எஸ்தோக்குப்பிள்ளை என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1966, நவெம்பர், 27 ஆந் திகதிய வரைபட இல. 27 இல் விபரிக்கப்பட்டுள்ள தெற்கு பகுதியிலிருந்து பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு.) உரிமம் பெற்ற நில அளவையாளர் T. B. S. சங்கரன்தெனிய என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2000.09.22 ஆந் திகதியிடப்பட்ட வரைபட இல. 1016 இல் விபரிக்கப்பட்டுள்ள பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு 06 ஆகும்.

விஸ்தீரணம் - ஏ:03 றூ:00 பே : 17.76

**2022, யூலை, 25 ஆந் திகதி மு.ப. 11.30 மணிக்கு**

**ஆதனத்தை வந்தடைதல்.**- பொத்துவில் மணிக்கூட்டுக் கோபுரத்தின் அருகிலிருந்து பனாம பாதையினூடாக சுமார் 5 கிலோமீற்றர் வரை வரும் போது சொல்லப்பட்ட ஆதனமானது 05 மைல்கல் மற்றும் சம்மர் கொட்டேஜ் ஹோட்டலுக்கு சற்று முன் அப்பாதையின் வலது பக்கத்தில் அமைந்துள்ளது.

''கடப்பாடுடையவர்களான/ஈடுவைத்தவர்களான'' ஆதம் பாவா அப்துல் கையூம், அப்துல் கையூம் அப்துல் சுப்ஹான் மற்றும் அப்துல் கையூம் அப்துல் அபீல் ஆகியோர் கல்முனையைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு A. M. ரகீப் என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 2013.05.23 ஆந் திகதியிடப்பட்ட ஈட்டுமுறி இல. 895 மற்றும் 2013.11.14 ஆந் திகதிய மேலதிக ஈட்டுமுறி இல. 1093 ஆகியவற்றின் மீதான வரவேண்டிய கொடுப்பனவில் தவணை தவறியுள்ளனர்.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.**- 2021.05.21 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் மற்றும் 25.04.2022ம் திகதிய "திவய்ன", "த ஐலன்ட்" மற்றும் "தினக்குரல்" பத்திரிகைகளையும் பார்க்கவும்.

கொவிட் -19 நெறிமுறைக்கு இணங்க, சுகாதார அமைச்சு வழங்கிய கடுமையான வழிகாட்டுதல்களின் படி ஏல விற்பனை நடாத்தப்படும்.

**கொடுப்பனவு முறை.**- கீழ்க்காணும் விதத்தில் கொடுப் பனவுகள் ரொக்கப்பணமாகச் செலுத்துதல் வேண்டும் :-

1. கொள்முதல் விலையில் 10%;
2. உள்நாட்டு இறைவரி மற்றும் வெட் வரி 1%;
3. ஏல விற்பனையாளர் கட்டணம் கொள்முதல் விலையில் 2.5%;
4. சகல பகிரங்கப்படுத்தல் செலவுகள்;
5. விற்பனை நிபந்தனை தொடர்பாக நொத்தாரிசு அத்தாட்சிப்படுத்தல் கட்டணம் ;
6. இலிகிதர் மற்றும் கூப்பிடுவோர் கட்டணம் ரூபா 1,500.00 மற்றும் விற்பனைக்கான வேறு கட்டணங்கள்.

ஏல விற்பனை திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் கொள்முதலில் மிகுதி 90% பணத்தொகையை வங்கிக்குச் செலுத்துதல் வேண்டும். மேற்கூறிய பணத்தொகையானது 30 நாட்களுக்குள் செலுத்தத் தவறுமிடத்து செலுத்தப்பட்டுள்ள பணத்தொகையில் 10% இழக்க வேண்டி ஏற்படுவதுடன், அவ்வாதனத்தை மீள் விற்பனை செய்வதற்கு வங்கிக்கு அதிகாரமுண்டு.

உரித்தாதனம் மற்றும் விபரங்களுக்கு: தலைமை அறவீட்டாளர், பேன் ஏசியா பேங்கிங் கோப்பரேஷன் பி. எல். சி, தலைமை காரியாலயம், இல. 450, காலி வீதி, கொழும்பு 3.

தொலைபேசி இலக்கங்கள்: 011-4667130, 011-4337237, 0114667227.

பீ.கே.ஈ.சேனாபத்தி,
உரிமம் பெற்ற ஏல விற்பனையாளர்,

இல.134, பெத்தகான வீதி,
கோட்டை.
தொலைபேசி இல. : 011-2873656, 077-7672082.
பெக்ஸ்: 011- 2871184.

06-337

---

## தேசிய அபிவிருத்தி வங்கி P. L. C. - பகிரங்க ஏலவிற்பனை

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க சட்டத்தின் வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட சட்டம்) 9 ஆம் பிரிவின் கீழ் விற்பனை அறிவித்தல்

இந்த ஏலவிற்பனையானது Covid 19 நடைமுறைக்கு அமைய சுகாதார அமைச்சினால் வழங்கப்பட்டுள்ள கடுமையான வழிகாட்டுதல்களுக்கு அமைய நடாத்தப்படும்.

தேசிய அபிவிருத்தி வங்கி P. L. C. பணிப்பாளர் சபையினால் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் உடுகொடகே பிரேமலால் ரன்ஜித் மற்றும் அருன ஷிவந்த உடுகொட ஆகியோர் கடப்பாடுடையவர்களாகவும் அருன ஷிவந்த உடுகொட என்பவர் ஈட்டாளராகவும் வழங்கப்பட்ட கடன் வசதிகளுக்காக தேசிய அபிவிருத்தி வங்கி P. L. C. இற்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனம். கீழ் விபரிக்கப்படும் ஆதனம்

2022.07.18 ஆந் திகதி மு.ப.11.00 மணிக்கு ஆதனம் அமைந்துள்ள அதே இடத்தில் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

மிகவும் பெறுமதிமிக்க சகல வசதிகளையும் கொண்ட வசிப்பிடத்திற்குப் பொருத்தமான சொத்து

ஊவா மாகாணம், பதுளை மாவட்டம், மெதகிந்த மஹபலாத்த கோரளை பண்டாரவளை பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பண்டாரவளை பிரதேச செயலாளர் பிரிவு அம்பேகொட கிராம அலுவலர் பிரிவு பண்டாரவளை பிரிவு

மெட்டிபிம்பிய கிராமத்தில் அமைந்துள்ள "பரனகெதரவத்த" எனும் காணி உரிமம் பெற்ற நில அளவையாளர் விஜித செல்லஹேவா என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2233 ஆம் இலக்க 2011.07.09 ஆந் திகதிய வரைபடத்தின் பிரகாரம் பிரித்தெடுக்கப்பட்ட லொட் 2 என அடையாளமிடப்பட்ட முப்பத்தொன்பது தசம் ஐந்து நான்கு பேர்ச்சஸ் (00ஏ. 00றூ. 39.54பே.) பரப்பளவான காணித்துண்டும் அதனுள்ளடங்கும் மாடிக் கட்டிடமும், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதுமாகும்.

